2017 ஜூலை 5] [முனைவர் கோவி. செழியன்]

அவரை இழந்து வாடுகின்ற அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அல்லது வனத் துறைமூலம் 10 இலட்சம் ரூபாய் தற்காலிக நிதியாகவும், குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வேலையும் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய நீண்டநாள் கோரிக்கையான அங்கு முதலைப் பண்ணை அமையுங்கள் அல்லது அங்கு இருக்கக்கூடிய 200—க்கும் மேற்பட்ட முதலைகளை முட்டுக்காடு முதலைப் பண்ணைக்குக் கொண்டு சென்று, விவசாயப் பெருங்குடி மக்களை பாதுகாத்துத் தாருங்கள் என்ற கோரிக்கையை வைத்து, அவையின் கவனத்தை ஈர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்களா, வனத் துறை செய்யுமா என்று கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் சரகம், 15, விநாயகர் தெரு கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னையன் என்பவரின் மகன், திரு. செல்லதுரை என்பவர் 3—7—2017 அன்று அணைக்கரை பாலம், கொள்ளிடம் ஆறு தென்கரையில் நீர்த்தேக்கப் பகுதிக்குச் சென்றபோது, நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள முதலை தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து நான் மிகவும் துயரம் அடைந்ததோடு, மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் வனத் துறைமூலம் உடனடியாக வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், அன்னாரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நேற்று 4—7—2017 அன்று மாலை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், உண்ணாவிரதம் இருப்பது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூலை 5

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னிந்திய கரும்பு கூட்டுறவுச் சங்கங்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அது தெரிந்த விஷயம். தற்சமயம் 3, 4 பருவங்களாக சர்க்கரையினுடைய விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இப்பொழுது 2015–2016 மற்றும் 2016–2017–ல்தான் விலை கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது. உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். சர்க்கரையின் உற்பத்தி விலையும் கூடிக்கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளாகத்தான் சர்க்கரை விலை கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது. இதுவெல்லாம் அரசினுடைய கவனத்தில் இருக்கின்றது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையிலே பொதுவாக பரிந்துரை விலை FRP–ஐ முழுவதுமாகக் கொடுத்துவிட்டார்கள். Private Sugar Factories மற்றும் Co-operative Sugar Factories மத்திய அரசினுடைய maximum FRP rate அதாவது பரிந்துரை விலை மற்றும் ஆதாய விலையை வழங்கிவிட்டன. மாநில அரசினுடைய பரிந்துரை விலை, SAP மட்டும்தான் பாக்கியிருக்கிறது. SAP–ஐ பொறுத்தவரையில் Co-operative Mill–ல் 235 கோடி ரூபாய்தான் பாக்கியிருக்கிறது. அதற்கு நிதித் துறையில் கேட்டிருக்கிறோம். நிச்சயமாக அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மேலும், தனியார் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையிலும், கிட்டத்தட்ட ரூ.1,267 கோடி SAP–விலை பாக்கி இருக்கிறது. இதற்காக, பல்வேறு meeting தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். நாங்கள் அவர்களை வலியுறுத்தியிருக்கிறோம். 2014–2015 மற்றும் 2013–2014–க்கு வேண்டாம்; 2015–2016 மற்றும் 2016–2017–க்குண்டான SAP–விலையை, மாநில அரசினுடைய பரிந்துரை விலையைக் கொடுத்தே ஆக வேண்டுமென்று அவர்களிடம் ஒரு நிர்ப்பந்தத்தை வைத்திருக்கிறோம். அவர்களுக்கு மிகப் பெரிய அழுத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்கள்கூட அந்த Dharani Sugar Factory-ஐப்பற்றிக் குறிப்பிட்டார். இதையெல்லாம் சேர்த்துத்தான் நாங்கள் கொடுக்க வேண்டும். என்ன கேட்டிருக்கிறோமோ நிச்சயமாக அவர்களை வலியுறுத்தி வாங்குவதற்கும், இல்லையென்றால், அரசின் மூலமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும்கூட தயாராக இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். டன்னுக்கு 3,500 ரூபாய் அல்லது 4,000 ரூபாய் என்பது எப்போதுமே கொடுக்க

2017 ஜூலை 5] [திரு. எம்.சி. சம்பத்]

முடியாது. அதையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருத்தில் கொள்ள வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை இந்த நல்ல நேரத்திலே வைத்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமருகிறேன்.

(இ) சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் வட்டம், அரசு உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளி மாணவன் அரவிந்தன் உயிரிழப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 24–6–2017 அன்று என்னுடைய சங்கராபுரம் தொகுதியில் கோமுகி அணையிலுள்ள அரசினர் உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்ற 6 ஆம் வகுப்பு மாணவர்கள் குளிப்பதற்கு விடுதியில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், பக்கத்திலே இருக்கின்ற கோமுகி அணையில் குளிக்கச் சென்றபோது, அரவிந்தன், சூரியா உள்ளிட்ட மற்ற மாணவர்கள் சேர்ந்து குளிக்கின்றபோது, அரவிந்தன் என்ற மாணவன் அந்த ஆற்றிலேயே இறந்துவிட்டான். தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, பிரேதப் பரிசோதனைச் செய்து, நானே உடன் இருந்து உடலை அடக்கம் செய்தோம். அந்த விடுதிக் காப்பாளர்மீது, துறையின் வாயிலாக 3 மாதங்களுக்கு முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும் அதே பள்ளி விடுதியில் அவர் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். இந்தக் கவனக் குறைவும் ஒரு காரணம். அந்தப் பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கின்றனர். 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மேல்நிலைப் பள்ளி. ஆகவே, குளிப்பதற்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால் அந்த மாணவர்கள் பக்கத்தில் இருக்கின்ற கோமுகி ஆற்றில்தான் குளிக்கச் செல்லுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆக, அப்படி இருக்கின்றபோது இந்த மாணவன் இறந்திருக்கின்றான். ஆகவே, இதைக் கருத்திலே கொண்டு, நேற்றைக்கு முதல் நாள் நான் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், அந்த விடுதிக் காப்பாளர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தேன்.